RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்



OPEN ACCESS

DOI: 10.34256/irjt22s517

# பெரியாரியப் பார்வையில் இலக்கியச் சாடலும் பெண்ணுரிமை பேணலும்

## இரா. விஸ்வநாதன் [அ, *]

[அ] தமிழ்த்துறை, சிக்கய்ய நாய்க்கர் கல்லூரி, ஈரோடு-638004, தமிழ்நாடு, இந்தியா.

# Literary Criticism and the Preservation of Feminism in the Perspective of Periyar

## R. Viswanathan [a, *]

[a] Department of Tamil, Chikkaiah Naicker College, Erode-638004, Tamil Nadu, India

* Corresponding Author: viswacnc@gmail.com

Received: 28-07-2021
Revised: 30-04-2022
Accepted: 07-05-2022
Published: 13-07-2022

## ABSTRACT

Father Periyar was a world leader in building the power for social change. He emphasized the need for education to transform feminism into a barrier to social progress and to establish a society of social justice and equality. Participates in re-reading genetics and critically presenting examples or recording rational solutions. Father Periyar's rational theories also turned the literary scene into a furnace. Organizations organized as sharp tools in his rational furnace reacted as discussion, dialogue, critique, evaluation, re-reading, innovation. He put in front of his view what was recorded in them and made it a subject of emancipation, women's emancipation, social justice, self-respect and rationality. Thus, he wanted the female characters in the literature to be created as independent, economically entitled and self-determined. Periyar therefore emphasizes the need for feminism, which Periyar sometimes denounces traditional feminist myths. Father Periyar was a social scientist who created the Dravidian movement's creative lineage and caused a social revolution. News about feminism can be found in this article.

**Keywords:** Father Periyar, Non-Fiction, Clumsy, Literary Criticism

## முன்னுரை

இலக்கியம் என்ற சொல் “இலட்சணம்” என்ற வடமொழிச் சொல்லின் தமிழாக்கம். திணைக் கோட்பாடு என்ற சங்க இலக்கியக் கோட்பாடு தோன்றிய காலத்தில் இலக்கியம் என்ற சொல்லாட்சி இருந்திருக்க இடமில்லை. பா, செய்யுள், பாட்டு என்றே வழங்கப்பட்டது. பத்துப்பாட்டு, குறிஞ்சிப்பாட்டு, பரிப்பாட்டு என்ற சொல்லாட்சிகளுக்கு, பத்து இலக்கியம், குறிஞ்சி இலக்கியம், பயண இலக்கியம் என்று கொள்வதே பொருள் பொருத்தமானதாக இருக்கும்.

இலக்கியம் என்பதற்குக் “கழகத் தமிழ் அகராதி”, “இலக்கணப்படி அமைந்த நூல்” என்று குறிப்பிடுகின்றது. நீண்ட நெடிய வரலாற்றைத் தன்னகத்தே கொண்ட தமிழ் இலக்கியத்தில் ஐந்து வரலாற்றுக் கூறுகளைக் காணலாம் (Kazhaga Tamil Agarathi, 2004).

1 தனிமனித வாழ்வியல்/உளவியல் வரலாறு.
2 பண்பாட்டு மானுடவியல் வரலாறு.
3 அரசியல் வரலாறு.
4 மொழி, சமய வரலாறு.

5 கலை அழகியல் வரலாறு.

சுருங்கக் கூறின், மொழி, கலை, இலக்கியம், சார்ந்த ஆய்வுகள் சமூகத்தின் மையத்தை முற்றுகையிட்ட ஆதிக்கச் சக்திகளுக்கும் விளிம்பு நிலைக்குத் தள்ளப்பட்ட அடிமைச் சக்திகளுக்கும் இடையில் கலை, சமூக அமைப்புகளுக்கேற்பத் தோன்றும் முரண்பாடுகள், சிக்கல்கள், போராட்டங்கள், தீர்வுகள், விளைவுகளின் தொகுப்பு போன்றவையே சமூக மற்றும் இலக்கிய வரலாறாகிறது.

இதனூடே சமூகம் அடுத்தடுத்த நிலைகளுக்கு மாற்றங்களையும் வளர்ச்சிகளையும் பெற்று வருகின்றது. இத்தகைய இலக்கியங்கள் எவ்வாறான சமுதாயத்தை முன் வைக்கிறது என்பதைத் தந்தை பெரியாரின் வழி இவண் காணலாம்.

சமூக மாற்றத்திற்கான ஒற்றைக் குறியீடாக இனம் காணப்பெறுபவர் தந்தை பெரியார் அவர்கள். அவர் அதிகாரத்திற்கு எதிரான அதிகாரத்தைக் கட்டமைப்பதில் முன்னின்று களப்பணியாற்றிய சமூக விஞ்ஞானி. சமுதாயச் சீர்திருத்தம் பெரியார் அவர்களின் தணிவில்லா வேட்கை. அவர் கருத்துக்களில் இடம்பிடித்தவை இரண்டு தகவுகள்.

1 சமுதாய முன்னேற்றம்

2 அதனைத் தடை செய்யும் பெண்ணடிமை

இலக்கியங்களை மேற்கோள் காட்டிக்“கைத்தட்டல்” பெறுவதை விரும்பாதவர். மாறாக, இலக்கியங்களைக் கடிந்து கருத்துரைக்கும் கல்லொத்த நிலைப்பாடுடைய கொள்கைப் போராளி. எனவே பெண்மை குறித்த இலக்கிய நோக்குகளைத் தந்தை பெரியார் புனைவில்லாத எதார்த்தமான கருத்தாடல்களின் வழி பதிவு செய்துள்ளார்.

## வாழும் வள்ளுவம்

வள்ளுவத்தைத் தமிழர் அனைவரும் கற்க வேண்டும் என்று முதன்முதலில் அறிவுறுத்தியவர் தந்தை பெரியார். தமிழர்கள் பகுத்தறிவும் தன்மானமும் பெற வள்ளுவம் சிறந்த கருவியாகும் என்றார் இருப்பினும் சிற்சில இடங்களில் வள்ளுவத்துடன் பெரியார் அவர்கள் முரண்பட்டு நின்றார்.

02.03.1930 ஆம் நாளிட்ட 'குடிஅரசு' இதழில் 'சித்திரபுத்திரன்' எனும் புனைபெயரில் பெரியார் அவர்கள் எழுதிய உரையாடலே அதை உணர்த்தும்,

தெய்வம் தொழாஅள் கொழுநன் தொழுதெழுவாள்

பெய்யெனப் பெய்யும் மழை

என்ற குறட்பாவை மறுத்த பெரியார் அவர்கள், பெண்களை விபச்சாரிகளாய்ப் படைத்த கடவுள் என்ற தலைப்பில்,

“இல்லாத - இயலாத திறன் ஒன்றினைப் பெண்மையின் மீது திணித்து - அது இல்லாமல், இயலாமல் போகும்போது - பெண்மையை ஐயுற வேண்டியதாகின்றது. இது எவ்வகையில் அறம்? என்று கேள்வியெழுப்பிச் சாடுகின்றார் (Thamizhannal, 2007).

## சிலப்பதிகாரம்

கண்ணகிப் பாத்திரத்தைத் தெய்வத்தன்மை கொண்டதாகவும் மாதவியைக் காதல் களஞ்சியமாகவும் காட்ட இளங்கோ செய்துள்ள முயற்சிகளைப் பெரியார் அவர்கள் விமர்சிக்கின்றார் (Venkatasamy Nattar, 2011).

“பெண்களை ஆண்கள் நடத்துகிற மாதிரியும், படுத்துகிற பாடும் போல் உலகத்தில் வேறு எந்த ஜீவனாவது செய்கிறதா? பெண்களிடம் சக்தி சொரூபத்தையும், தெய்வத்தன்மையையும் காதல் களஞ்சியத்தையும் தாய்மையையும் அன்பையும் கண்ட 'பெரியார்கள்' என்னும் மிருக சிகாமணிகள், பெண்களைப் பற்றி எப்படி எழுதி வைத்திருக்கிறார்கள்? எப்படி நடத்தும்படி எழுதி வைத்திருக்கிறார்கள்?

என்று பார்த்தால் - உலகில் சுயமரியாதை உள்ள பெண்கள் குழந்தைகள் பெறவே மாட்டார்கள்" என்கிறார் பெரியார்.

மதுரையை எரிக்குமளவிற்குத் தெய்வத்தன்மை ஏற்றிக் கூறப்பட்ட கண்ணகிக்குத் தன் கணவன் கணிகையரை நாடிச் செல்வதைத் தடுக்க இயலவில்லை. வெறுங்கையுடன் வந்த கணவனை, செல்வங்கள் எங்கே? என்று கேட்க உரிமை இல்லை. 'செல்வ வாழ்க்கை வாழ்ந்த பெருமை' மட்டுமே மனதில் நிற்கும் கணவன் - தன் பெருமை அழிந்துவிடக் கூடாது என்பதற்காகப் பஞ்சம் பிழைக்க அழைக்கும்போது மறுக்கின்ற வலிமை இல்லை.

இப்படி முறையாக இல்வாழ்வில் கிடைக்க வேண்டிய உரிமைகளையெல்லாம் பறித்துக் கொண்டு, மதுரையை எரிக்கும் தெய்வத்தன்மையால் பெண்மைக்குக் கிடைத்த நன்மை என்ன?

கருத்தொருமித்துக் காதல் வாழ்ந்த காதலனிடம் சிறுஊடல் செய்த குறையால் தனித்து விடப்படும் மாதவியின் நிலையை எப்படிக் காதல் களஞ்சியமாகக் கொள்ள முடியும்? ஊராரின் பகடிக்கு ஆளான "தாய்மை" எப்படிச் சிறப்படைய முடியும்?

ஆக, கண்ணகி அறிவுமயங்கி மேற்குமலைச் சாரலில் அலையவும், மாதவி துறவு பூண்டு, புகாரில் அலையவும் செய்துவிட்ட குமுகாயத்தில் பெண்மையைச் சிறப்பிக்கும் பண்பை எங்கே காண்பது? என்று அடுக்கடுக்கான கேள்விக்கணைகளைப் படித்தவர்கள் என மார்தட்டிக் கொள்ளும் பண்பாளர்களை நோக்கி வீசுகின்றார்.

## அடிமை உருவா?

"பெண்ணுக்குச் சொத்துக் கூடாதாம், காதல் சுதந்திரம் கூடாதாம். அப்படியானால் மனிதன் தன் தேவைக்குப் பயன்படுத்திக் கொள்ளும் இரப்பர் பொம்மையா?" அடிமை உருவா?" எது என்று கேட்கிறேன்?"

என்று சினம் பொங்க வினவுகின்றார் கோவலன் மாதவியைத் தேடிப் போனதைப் போன்று கண்ணகி ஒருவனைத் தேடிப் போகமுடியாதா? கோவலன் அழித்ததைப் போல் சொத்துக்களை அழிக்க முடியாதா? அப்படி நடந்தால் என்ன செய்து விடுவார்கள்? கற்பின் சிறப்பைக் கூறுவதாக எண்ணிக் கொண்டு பெண்கள் கல்லைவிடத் தாழ்மை கொண்டவர்கள் என்று நிலை நாட்டுவதா?

இதெல்லாம் ஓர் இலக்கிய இன்பத்திற்காக எழுதப்பட்டது. அதை வாழ்வியலாகக் கொண்டு கருத்தாய்வதெல்லாம் செய்யக் கூடாது - அப்படிச் செய்பவர்கள் தமிழ்ப் பண்பாட்டின் எதிரிகள் என்று கூறுகின்றார்களே? அது எப்படி முறையாகும்? இலக்கியப் பார்வையிலா சிலம்பு நோக்கப்படுகிறது? பெண்களின் கற்பு எந்நிலையிலும் கெட்டுவிடக் கூடாது என்று காவல் காக்கும் காவல்காரனாக அல்லவா நிற்கின்றது என்று சிலம்பின் மீதானதம் பார்வையைத் தந்தை பெரியார் பதிவு செய்கின்றார்.

## கம்பராமாயணம்

கம்பராமாயணத்தில் பெண்கள் சூழச்சிக்காரர்களாகவும் (மந்தரை) தன்னலம் மிக்கவர்களாகவும் (கைகேயி), நாணமின்றிக் காமம் கொண்டவர்களாகவும் (சூர்ப்பனகை) காட்டப்படுவது முரணானது. அதனாலேயே தந்தை பெரியார் அவர்கள் கம்பராமாயணத்தை எரியூட்டச் சொன்னார் என்று கருதலாம்.

அயோத்தியில் தயரதன் இறந்ததும் அரசியர் மூவரும் கைம்மை நோற்கின்றனர். கிட்கிந்தையில் வாலி இறந்ததும் தாரை கைம்மை நோற்கின்றாள். இவ்விரண்டு நிகழ்ச்சிகளையும் கம்பர் ஒன்றாகக் காட்டுவார் (Kamban, 1994).

அயோத்தி அரசியர் மூவரும் முதியவர்கள். அவர்கள் கைம்மை நோற்றதில் இழப்பொன்றும் இல்லை. ஆனால் தாரை இளையவள். தான் இருக்கும்போதே சுக்கிரீவன் மனைவியைத் தூக்கிக் கொண்டு வந்த வாலிக்காக, அவள் ஏன் கைம்மை நோற்க வேண்டும்? இறந்துவிட்ட ஒருவருக்காக இருப்பவர்கள் இறந்துகொண்டு இருக்க வேண்டுமா? இடைப்பட்ட காலத்தில் கணவனைப் பிரிந்த

சீதையின் துன்பத்தையே கம்பன் பலவாறு விளக்கிப் பேசும் போது, முடிவாகப் பிரிந்துவிட்ட கைம்பெண்ணின் துன்பம் குறைவாய் இருக்குமோ? அது அப்படியே நிலைத்து நிற்க வேண்டுமா?

ஒரு போர் வெறியனால் பல கைம்பெண்கள் உருவாகி, அவர்கள் வாழ்நாள் கருகுவதை இலக்கியமாகக் காட்டுவதை ஏற்றுக்கொள்ள முடியாது. இராவணன், கும்பகருணன், இந்திரசித்து, மயில் இராவணன் போன்றோரின் மனைவியர் பூவும், பொட்டுமிழந்து நிற்க, சீதை மட்டும் மஞ்சள் பூசிக் குளிப்பதுதான் அறமா? என்று கேட்ட தந்தை பெரியாரின் கேள்விகளுக்குக் கண்மூடித்தனமான பிற்போக்குவாதிகளிடம் பதில் இல்லை.

## விதவை-தேவையா?

பெண்களில் விதவைகள் என்று ஒரு நிலை ஏன் இருக்க வேண்டும்? கல்யாணம் செய்து கொண்டால் தானே இந்தக் கொடுமை? கல்யாணம் செய்து கொள்ளாவிட்டால் எப்படி விதவையாக முடியும்? கல்யாணம் செய்து கொள்ளாமல் இருப்பதால் பெண்களுக்கு இரண்டுவித இலாபம் இருக்கின்றது.

குழந்தை பிறக்காது

விதவை ஆக முடியாது

இவற்றோடு சொத்து வைத்திருக்க உரிமையற்ற நிலையும் இருக்க முடியாது. உலகில் உள்ள சகல கொடுமைகளிலும் விதவைக் கொடுமையே மோசமானது. விபச்சாரம் பெருகுவதற்கு விதவைத் தன்மையே காரணம் என்றும் தந்தை பெரியார் காரணங்களை அடுக்குகின்றார்.

தந்தை பெரியாரின் பகுத்தறிவு, சுயமரியாதைச் சிந்தனைப் பாதையை அடியொற்றிய வழித்தோன்றல்கள் தம் படைப்பிலக்கியங்களில் பெண் விடுதலை, இன மீட்சி, சமூகச் சமத்துவ எழுச்சி முதலானவற்றை மீட்டெடுக்கப் பாடுபட்டனர். இந்த மீட்டுருவாக்கத்தைப் படைப்பிலக்கியத்தில் கோட்பாடாகவே பின்பற்றினர்.

பேரறிஞர் அண்ணா, கலைஞர், தென்னரசு, டி.கே.சீனிவாசன், பாரதிதாசன் முதலானோர் இன விடுதலை, பேரின எதிர்ப்பு, சாதிமத எதிர்ப்பு, பார்ப்பன எதிர்ப்பு, இந்தி எதிர்ப்பு, பெண் விடுதலை, மொழி இன மறுமலர்ச்சி, பொதுவுடைமை போன்ற உள்ளடக்கங்களைத் தம் படைப்புக்களின் உரிப்பொருளாக்கினர் (Bharathidasan, 2016).

தந்தை பெரியாரை அடியொற்றி, பழமையைக் கேள்விக்கு உட்படுத்தும் மீட்டுருவாக்கக் கோட்பாட்டைத் தொடர்ந்து தம் படைப்பிலக்கியங்களில் பின்பற்றி எழுதி வருகின்ற எழுத்தாளர்களுக்குப் புதுமைப்பித்தனும் புரட்சிக்கவிஞர் பாரதிதாசனும் தலைமை தாங்கினர் எனலாம்.

சாப விமோசனம், பொன்னகரம் முதலான தம் படைப்புகளில் புதுமைப்பித்தன் மறுவாசிப்பின்வழி சமூக மீட்டுருவாக்கத்தைக் கட்டமைக்க முயன்றார்.

புரட்சிக்கவிஞர் பாரதிதாசனின் இயற்கை, காதல், தமிழ், திராவிட நாடு போன்ற தலைப்புகளில் மீட்புக் கோட்பாட்டைக் காணலாம். சஞ்சீவி பர்வதத்தின் சாரல், வீரத்தாய், போர் மறவன், கடல்மேற்குமிழிகள், பாண்டியன் பரிசு, எதிர்பாராத முத்தம் போன்ற காப்பியப் படைப்புகளில் மீட்புவாத இலக்கியக் கோட்பாடு செயற்படுவதை உணரலாம்.

## முடிவுரை

எல்லோராலும் இலக்கியம் என்று போற்றப்படுவதாலேயே அதிலுள்ள கருத்துக்கள் முறையானவை என ஏற்றுக் கொள்ள முடியாது.மாந்தர் உரிமை பறிபோகும் செயல்கள் பண்பாடு ஆகமுடியாது. கற்றறிந்த புலவர்கள் இலக்கியங்களைத் தூக்கிப் பிடித்து நின்றபோது தந்தை பெரியார் அவற்றிலுள்ள குறைகளைத் துணிச்சலாகப் பொதுவெளியில் உரக்கக் கூறினார். இருப்பினும்

இலக்கியத்தையோ, இலக்கிய உணர்வையோ குறை கூறவில்லை. இலக்கியங்கள் மக்கள் வாழ்க்கையின் படிமங்கள். அவற்றில் தவறான போக்குகள் களையப்பட வேண்டும். பெண்களின் இழிநிலைக்கு இலக்கியக் கோட்பாடுகள் தூண்டுதலாய் இருத்தலாகாது என்றார். பெரியார் பாசறையின் தளகர்த்தர்களாகவும் போர் வீரர்களாகவும் உருவான எழுத்தாளுமைகள் அவர் காண முற்பட்ட சமுதாயத்தைச் சிந்தனைப் படைப்புக்களாய்த் தந்தார்கள். அவர்களுள் பேரறிஞர் அண்ணா, கலைஞர், பாரதிதாசன், சுரதா வாணிதாசன், முடியரசன், பட்டுக்கோட்டையார் தமிழ்ஒளி, மீரா, அப்துல் ரகுமான், இன்குலாப், தமிழன்பன், ஞானி, தொ.ப., எஸ்.வி.ராஜதுரை, அ.மார்க்ஸ், கோ.கேசவன், க.நெடுஞ்செழியன், சுப.வீ., மதிமாறன், சுபகுணராஜன், செந்தலைக் கவுதமன் முதலானோர் பயன்படு பழமையின் விழுமியங்களை வரவேற்றும் பயன்படாப் பழமையை விமர்சனத்துக்கும் விசாரணைக்கும் உட்படுத்தியும் இலக்கியப் படைப்பில் ஈடுபட்டு வருகின்றனர்.

## References


Bharathidasan, (2016) Bharathidasan Kavithikal, Kaavya Pathipagam, Chennai, India.

Kamban, (1994) Kambaramayanam, Kamban Aranilai, Coimbatore, India.

Kazhaga Tamil Agarathi, (2004) Tirunelveli Thennindia Saiva Sithantha Noorpathippu Kazhagam, Tirunelveli, India.

Thamizhannal, (2007) Thirukural, Meenakshi Puthaka Nilayam, Madurai, India.

Venkatasamy Nattar, N.M., (2011) Silappatikaram, Gowra Puthaga Maiyam, Chennai, India.


**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License